# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102113

1. District : மாவட்டம் — தென்காசி | PS: காவல்நிலையம் — ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு — 2023 | FIR No.: மு.த.அ. எண் — 01/2023 | Date: நாள். — 16.03.2023

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 — Sections பிரிவுகள்: 7(a) r/w

   (ii) Act சட்டம்: Cr.PC — Sections பிரிவுகள்: 102 Cr.PC

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 15.03.2023 — Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 08.00 hrs to — Time to : நேரம் வரை 18.20 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.03.2023 — Time : நேரம் 14.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — RTO Check Post, Puliyarai, 15 KM West

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திரு.K.அரவிந்த்

   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — M.S.கண்ணன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 25.05.1982

   (d) Nationality : நாட்டினம் — இந்தியன்

   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் — நேர்முக உதவியாளர்

   (g) Address : முகவரி — மாவட்ட வழங்கல், மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின்,நேர்முக உதவியாளர், தென்காசி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. திரு.பால் முனியாண்டி, மோட்டார் வாகன ஆய்வாளர் (N/T), போக்குவரத்து துறை சோதனை சாவடி, புளியரை, 2.திரு.செந்தில்பாண்டி உதவியாளர், போக்குவரத்து துறை சோதனை சாவடி, புளியரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

No delay

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 16.03.2023ம் தேதி 14.00 மணிக்கு துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி G.மதியழகன் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும் போது தென்காசி மாவட்டம், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.K.அரவிந்த் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 15.03.2023-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர், K.அரவிந்த், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர், தென்காசி மாவட்டம். பெறுநர், துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி மாவட்டம். பொருள்: திடீர் தணிக்கை செயல்முறைகள் மேல்நடவடிக்கை எடுக்க வேண்டுவது தொடர்பாக. 15.03.2023-ம் தேதி நான் அலுவலில் இருக்கும்போது தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்கள் தென்காசி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் திடீர் தணிக்கை அலுவலுக்காக அனுப்பி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 16/03/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
(signature) 16/03/23

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16.03.2023 at 18.00 hrs.

Name: பெயர் G. MATHIALAGAN
Rank: நிலை D.S.P. ........No. எண் ..........
V&AC, Tenkasi.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

வைத்ததன் பெயரில், எனது தலைமையில் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் போலீஸ் குழுவினருடன் இருந்து கண்காணித்ததில் மதுரை முதல் கொல்லம் ரோட்டில் (NH-208) இடது பக்கம் வடக்கு நோக்கி அமைந்துள்ள புளியரை வட்டார போக்குவரத்துதுறை சோதனை சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள் கேரளாவில் இருந்து தமிழ்நாட்டிற்கு வரும் வாகனங்களுக்கும், தமிழ்நாட்டில் இருந்து கேராளவிற்கு செல்லும் வாகனங்களை சோதனை செய்து சீல் அடிப்பதற்கு லஞ்சம் வாங்குவதாக தெரிந்ததின்பேரில் 15.03.2023-ம் தேதி மாலை 18.20 மணிமுதல் 22.00 மணிவரை புளியரை வட்டார போக்குவரத்து சோதனை சாவடியில் திடீர் தணிக்கை செய்தபோது அலுவகத்திற்குள் இருந்த உதவியாளர் திரு.செந்தில் பாண்டியன் முன்பிருந்த செயலிடைமேடையில் கணக்கில் காட்டப்படாத ரூ.900/- மற்றும் கணிணியறையில் உள்ள சன்னலில் வாகனங்களின் எடை பார்த்த பழைய ரசீதுகளுக்கிடையே இருந்த ரூ.14,000/-ம், ரெக்கார்டு அறையில் இருந்த உதவியாளர் திரு.செந்தில் பாண்டியன் என்பவரது கருப்பு நிற பர்சில் இருந்த ரூ.780/- மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் (N/T) திரு.பால்முனியாண்டி மணி பர்சிலிருந்து ரூ.500/- ஆகமொத்தம் பணம் ரூ.16,180/- கைப்பற்றப்பட்டது. மேற்படி புளியரை போக்குவரத்துதுறை சோதனை சாவடி அலுவலகத்திற்குள் சோதனையின்போது 1.மோட்டார் வாகன ஆய்வாளர் (N/T) திரு.பால்முனியாண்டி 2.உதவியாளர் திரு.செந்தில்பாண்டியன், 3.அலுவலக உதவியாளர் திரு.செல்வகணேசன் ஆகியோர் பணியில் இருந்தார்கள். மேற்படி கணக்கில் காட்டப்படாத பணம் ரூ.16,180/- சோதனை சாவடி அலுவலர்கள் கையூட்டாக பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் சோதனையின்போது தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள், ஆவணங்கள் மற்றும் கணக்கில் காட்டப்படாத பணம் ரூ.16,180/- சம்மந்தமாக மேற்படி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன். Sd.(K.அரவிந்த்) நேர்முக உதவியாளர், மா.வ (ம) நு.பா.அ தென்காசி. 15.03.2023ம் தேதி புளியரை வட்டார போக்குவரத்து துறை சோதனை சாவடியை தென்காசி மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.K.அரவிந்த் அவர்கள் திடீர் ஆய்வு செய்தது சம்மந்தமான செயல்முறை ஆணை. முன்னிலை :- திரு.K.அரவிந்த், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர், தென்காசி. 2).திரு.G.மதியழகன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி. இன்று 15.03.2023ம் தேதி மாலை 16.00 மணிக்கு தென்காசி மாவட்டம் புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடி அலுவலர்கள் கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரும் வாகனங்களுக்கும்,

தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்கு செல்லும் வாகனங்களை சோதனை செய்து, ஆவணங்களை சரிபார்த்து சீல் அடிப்பதற்கு லஞ்சம் வாங்குவதாக கிடைத்த தகவலின் பேரில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு கொடுத்த வேண்டுகோளுக்கிணங்க இன்று 15.03.2023-ம் தேதி மாலை 17.30 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜரான தென்காசி மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.K.அரவிந்த் அவர்களுடன் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.G.மதியழகன் மற்றும் போலீஸ் பார்டிகளுடன் அரசு வாகனம் TN 22 G 0995 மற்றும் இரு சக்கர வாகனங்களில் 18.00 மணிக்கு புறப்பட்டு மாலை 18.20 மணிக்கு NH-208 மதுரை முதல் கொல்லம் ரோட்டில் இடது பக்கம் வடக்கு நோக்கி அமைந்துள்ள மேற்படி புளியரை வட்டார போக்கு வரத்துத்துறை சோதனை சாவடி அலுவலகத்திற்கு வந்து திடீர் தணிக்கை செய்யப்பட்டது. சோதனை சாவடியின் முன்பு ரோட்டின் அருகே அமைக்கப்பட்டிருந்த ஆஸ்பெஸ்டாஸ் அருகே ஒரு நபர் காக்கி யூனிபார்மில் நின்று கொண்டிருந்தவரை விசாரித்தபோது தன்னுடைய பெயர் M.செல்வ கணேசன் என்றும், புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடியில் அலுவலக உதவியாளராக இருப்பதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை சாவடிக்குள் அழைத்துக்கொண்டு சோதனை சாவடி அறைக்கு உள்ளே நுழைந்ததும் வலது பக்கம் செயலிடை மேடை உள்ளது. அதில் ஒரு நபர் ஆவணங்களை சரிபார்த்துக்கொண்டிருந்தார் அவரை விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் செந்தில் பாண்டியன் என்றும், உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அதற்கு கீழ்புறத்தில் பின்னால் பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்த மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.பால் முனியாண்டி காக்கி யூனிபார்மில் அமர்ந்திருந்தார். அவர்களிடம் நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, எங்களை சுயபரிசோதனை செய்த பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கணினியில் இன்றைய வசூல் குறித்து கேட்டபோது அவர் தற்போது சோதனை சாவடியில் பணமாக எந்த வசூலும் செய்யப்படவில்லை என்றும், கட்டணம் எல்லாம் ஆன்லைனிலேயே செலுத்தவேண்டும் என்றும் தெரிவித்தார். புளியரை சோதனை சாவடியை கடந்து செல்லும் வாகனங்களின் ஓட்டுநர் கொண்டுவந்து காண்பிக்கும் ஆவணங்களை மேற்படி கேபினில் இருந்து சரிபார்த்துக் கொண்டிருந்த உதவியாளர் திரு.செந்தில் பாண்டியன் முன் 15.03.2023-ம் தேதி வாகனங்கள் எடை பார்த்த 211 ரசீதுகள் மற்றும் அதனுடன் கத்தையாக பணம் இருந்ததை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.900/- (200X1=200, 100X3=300, 50X7=350, 20X2=40, 10X1=10) இருந்தது. மேற்படி பணம் பற்றி திரு.செந்தில் பாண்டியனிடம் கேட்டபோது அவர் புளியரை

சோதனை சாவடியை கடக்கும் வாகனங்களில் இருந்து ஆவணங்களில் சில் அடிப்பதற்காக பெறப்பட்ட லஞ்சப்பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.900/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. உதவியாளர் திரு.செந்தில் பாண்டியனிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவர் தன் சட்டை பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.3,500/- இருந்தது. மேற்படி பணத்தை சோதனை சாவடியின் பணியாளர்கள் பணம் கையிருப்பு பதிவேடு 2023-த்தோடு ஒப்பிட்டு பார்த்தபோது இரண்டும் ஒன்றாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.3,500/-ஐ திரு.செந்தில் பாண்டியனிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பால் முனியாண்டியிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவரது பர்சில் இருந்து ரூ.1,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது தொடர்பாக சோதனை சாவடியின் பணியாளர்கள் பணம் கையிருப்பு பதிவேட்டில் ஒப்பிட்டு பார்த்தபோது அதில் அவர் ரூ.1,000/- கையிருப்பு பணமாக குறிப்பிட்டிருந்தார். இது குறித்து அவரிடம் விசாரிக்க அவர் தான் செலவுக்காக வைத்திருப்தாக சொன்னார். மேற்படி பதிவேட்டில் குறிப்பிட்டிருந்த பணம் ரூ.1,000/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பதிவேட்டில் குறிப்பிட்டிருந்த பணத்தை விட கூடுதலாக வைத்திருந்த பணம் ரூ.500/-க்கு தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.500/-விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி செயலிடை மேடைக்கு தென்புறத்தில் உள்ள கணினி அறையை சோதனை செய்தபோது, அறையின் கீழ்புற சுவற்றில் வடகிழக்கு மூலையில் உள்ள ஜன்னலில் வாகனங்களின் எடை பார்த்த பழைய ரசீதுகளுக்கிடையே கத்தையாக ரப்பர் பேண்ட் போடப்பட்டு பணம் கிடந்தது. மேற்படி பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.14,000/- (500X6=3,000, 200X39=7,800, 100X32=3,200) இருந்தது. அந்த பணம் பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பால் முனியாண்டியிடம் கேட்டபோது வாகன ஓட்டிகள் அவர்கள் வாகனங்களில் உள்ள சிறு சிறு குறைபாடுகளை கண்டு கொள்ளாமல் இருப்பதற்காக கொடுத்த பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.14,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பால் முனியாண்டி அமர்ந்திருந்த மேஜையின் தென்புறத்தில் உள்ள அறையை சோதனை செய்தபோது, அறையின் வடமேற்கு மூலையில் உள்ள இரும்பு பீரோ காணப்பட்டது. மேற்படி இரும்பு பீரோவில் கணினி சம்மந்தமான பொருட்களும், பழைய பதிவேடுகளும் காணப்பட்டது. அதன் தென்புறத்தில் இன்வெர்ட்டர் பேட்டரியும், சிறிய பூஜை அறையும் இருந்தது. மேற்படி அறையின் கீழ்புறத்தில் உள்ள அறையில் ரேக்குகளில் பழைய ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. மேற்படி அறையின் கீழ்புறத்தில் உள்ள ரெக்கார்டு அறையில்

மேல்புறத்தில் உள்ள சிமெண்ட் ரேக்கின் நடுதட்டில் இருந்த பேக்கை சோதனை செய்தபோது அதில் கறுப்பு நிற பர்ஸ் ஒன்று இருந்தது. மேற்படி பர்சை சோதனை செய்தபோது அதில் பணம் ரூ.780/- (500X1=500, 200X1=200, 50X1=50, 20X1=20, 10X1=10)மும், உதவியாளர் திரு.செந்தில் பாண்டியனின் தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய அடையாள அட்டையும், செந்தில் பாண்டியன் பான்கார்டு எண்.CNRPS2476J இருந்தது. மேற்படி பர்ஸ் குறித்து உதவியாளர் திரு.செந்தில் பாண்டியனிடம் கேட்டபோது, அவர் தன்னுடைய பர்ஸ்தான் என்றும், அதில் உள்ள பணத்திற்கு அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.780/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அறையின் கீழ்புறத்தில் சமையல் அறையும், அதன் கீழ்புறம் கழிவறையும் அதனையடுத்து பெரிய ஹாலும் உள்ளது. சோதனை சாவடியின் மாடியில் பெரிய ஹாலும், கழிப்பறையும் உள்ளது. மேற்படி அறைகளில் எந்த பொருட்களும் காணப்படவில்லை.

மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பால் முனியாண்டி ஆஜர் செய்த புளியரை சோதனை சாவடி 1) வாகன நடமாட்ட பதிவேடு 2023, 2). பணப்பதிவேடு 23.09.2022 முதல் 3) செக் ரிப்போர்ட் பதிவேடு, 4) பணியாளர்கள் பணம் கையிருப்பு பதிவேடு 2023 5) வருகைப்பதிவேடு ஆகிய பதிவேடுகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பால் முனியாண்டி கணினியில் இருந்து Location Wise Challan Report – downloaded by tkptpaul@gmail.com downloaded at 15.03.2023 08:27:22 டவுன்லோடு செய்து கொடுத்ததையும் மற்றும் POS (Point of Sale) மெஷினில் இருந்து எடுத்த Challan summary எடுத்து கொடுத்தார். அந்த Challan summary விரைவில் அழிந்துவிடும் என்பதால் அதனை நகல் எடுத்தும், மேற்படி ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடியில் தமிழக தலைமை செயலாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஊழல் தடுப்பு பதாகைகள் ஏதும் வைக்கப்படவில்லை. இது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் கேட்டபோது அவர் விரைவில் வைத்துவிடுவதாக தெரிவித்தார். தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஆனந்த் மற்றும் மாவட்ட வட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர் முன்னிலையில் மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திரு.பால் முனியாண்டி, உதவியாளர் திரு.செந்தில் பாண்டியன், அலுவலக உதவியாளர் திரு.செல்வகணேசன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

[illegible] 15.03.2023 [illegible] 10,180/- [illegible] (15.03.2023) [illegible] 20.00 [illegible] 22.00 [illegible] Sd. K.Aravind, PA to DSO, TSI, sd. [illegible]

Sir, Received the complaint on 16.03.2023 at 14.00 hrs and after obtaining permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai, a case in Tenkasi V&AC, Cr.No.01/2023 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 r/w 102 Cr.PC was registered on 16.03.2023 at 14.30 hrs Sd G.Mathialagan, DSP, V&AC, Tenkasi.

The original complaint, Proceedings of Personal Assistant (PA to DSO), District Supply and Consumer Production Officer, Tenkasi and original FIR were sent to the Hon'ble Special Judge for Trial of cases under the Prevention of Corruption Act, Tirunelveli and copies sent to concerned higher officials.

16/3/23
G.MATHIALAGAN,
DSP V&AC,
TENKASI.